திருத்தப்பட்டது

**செய்தி வெளியீடு**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.184** **நாள் : 19.11.2018**

**உலகக் கழிவறை தினத்தை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக தூய்மை இந்தியா திட்டம் மற்றும் நோய்த்தடுப்பு சார்பாக பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, கல்வி நிறுவனங்கள், குடிசைப் பகுதிகள், வணிக நிறுவனங்கள் மற்றும் சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி உலகம் முழுவதும் 892 மில்லியன் மக்கள் இயற்கை உபாதையை கழிக்க திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதுடன் வயிற்றுப்போக்கு, காலரா, மஞ்சள்காமலை, டைபாய்டு காய்ச்சல் போன்ற நோய்கள் பரவவும் காரணமாக அமைகிறது. இதனை கருத்திற் கொண்டு ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 19ஆம் தேதி உலகக் கழிப்பறை தினமாக அறிவித்துள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் உலக மக்கள் அனைவருக்கும் சுகாதாரமான கழிப்பறையை ஏற்படுத்தி திறந்தவெளி கழிப்பிடமில்லாத உலகை உருவாக்குவதே இதன்முக்கிய நோக்கமாகும்.

இதனை முன்னிட்டு, இன்று (19.11.2018) தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட சூளைமேடு நெடுஞ்சாலையில் உள்ள ஜெய்கோபால் கரோடியா அரசுப் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 'உலகக் கழிவறை தினம்' மற்றும் நோய்த்தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில், 1600 மாணவிகள் மற்றும் 63 ஆசிரிய பெருமக்கள் கலந்து கொண்டனர். இம்முகாமில் திறந்தவெளி கழிப்பிடத்தை பயன்படுத்துவதினால் ஏற்படும் சுகாதாரக்கேடுகள், கழிப்பிடத்தை உபயோகிக்கும் முறைகள், முறையாக கைகழுவும் செய்முறை பயிற்சி, மத்திய நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்வச்சதா செயலியை (Swachhata - MoHUA) பதிவிறக்கும் செய்யும் முறை, அதன் மூலம் குப்பைகள் அகற்றுவது மற்றும் பொது கழிப்பறை சம்பந்தமாக குறைகள் இருப்பின் எவ்வாறு புகைப்படம் எடுத்து பதிவேற்றம் செய்வது மற்றும் 'நம்ம சென்னை' செயலியை பதிவிறக்கம் செய்து உபயோகிக்கப்படுத்தும் முறை முதலியன குறித்து விளக்கப்பட்டது. மேலும் டெங்கு மற்றும் காய்ச்சல் சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, மாணவிகள் அனைவருக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டது. பின்னர் மாணவியர் அனைவரும் தூய்மை இந்தியா மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இம்முகாமில் பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய மேற்பார்வை பொறியாளர் எம்.முருகன், சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், உதவி செயற்பொறியாளர் எஸ்.குமார், துப்புரவு மேற்பார்வையாளர், எக்ஸ்நோரா கோவிந்தராஜ், பசுமைப்படை தங்கராஜ், தலைமையாசிரியை ஏ.ஜெ.எழிலரசி, சுகாதார மற்றும் ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**